**Starting time 12.10 P.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 240/2015**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 11.07.2023 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெகநாதன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u> வாதி பிரதிவாதிகளை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால், 5-ம் பிரதிவாதி என்னுடைய மச்சினன், மற்றவர்கள் எனது பக்கத்து காட்டுக்காரர்கள். எனது காடு சொந்தமாக உள்ளதா என்றால், தற்போது இல்லை, எந்த வருடத்தில் விற்றேன் என்றால், 11 வருடங்கள் இருக்கும். 11 வருடங்கள் என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், 1983-லேயே எனக்கு சொந்தமான 50 செண்ட் நிலத்தை நான் விற்றுவிட்டேன் என்றாலும், எனக்கு படிக்கத் தெரியாது, எனக்கு தெரிந்ததை கூறுகிறேன். 1983-லேயே நான் எனது நிலத்தை சின்னு மற்றும் முருகன் ஆகியோருக்கு விற்றுவிட்டேன் என்றால், ஆமாம். சின்னு மற்றும் முருகனிடம் இருந்து 1988-ல் மாதம்மாள் மற்றும் பழனியாண்டி ஆகியோர் வாங்கினார் என்றாலும், அதன் பிறகு மாதம்மாள் மற்றும் பழனியாண்டியிடமிருந்து 8-ம் பிரதிவாதி ராமசாமி வாங்கினார் என்றால், ஆமாம்.

2. 1983-லேயே தற்போது நான் குடியிருக்கும் இடத்திற்கு வந்துவிட்டேன் என்றால், ஆமாம். 1983-லேயே நான் என் நிலத்தை விற்றுவிட்டு தாண்டவராயபுரத்திற்கு வந்துவிட்டேன் என்றாலும், தாவா சொத்திற்கும் நான் வசிக்கும் இடத்திற்கும் 4 அல்லது 5 கி.மீ. இருக்கும் என்றால்,

தாண்டவராயபுரத்தில்தான் இருக்கிறேன் தாவா சொத்திற்கு பக்கத்தில்தான் அது உள்ளது. தாவா சொத்தை விற்கும் போது நானும் உடன் சென்றேனா என்றால், ஆமாம். எவ்வளவு தொக்கு விற்றார்கள் என்றால், எனக்கு அது பற்றி தெரியாது. மாரியும் நானும் கூட்டாளியா என்றால், மாமன், மச்சினன் அதனால் தெரியும்.

3. 5-ம் பிரதிவாதி என்னுடைய மச்சினன் என்பதால் பணம் வாங்கிக் கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. 8-ம் பிரதிவாதி வாதியின் தகப்பனாரிடமிருந்து பாதி சொத்தையும், வாதியின் தகப்பனாரின் தம்பியிடமிருந்து பாதி சொத்தையும் கிரயம் பெற்றது பற்றி எனக்கு தெரியுமா என்றால், தெரியும், அந்த கிரயத்தின் போது நான் உடன் சென்றேனா என்றால், என்னை கூப்பிட்டார்கள், ஆனால், நான் செல்லவில்லை. தாவா சொத்தை விற்கும் போதும் நான் உடன் செல்லவில்லை என்றால், ஆமாம். வாதியையும், 5, 6 பிரதிவாதிகளையும் தாவா சொத்தை விற்ற மாரிதான் வளர்த்தார் என்றால், வளர்த்தார், ஆனால் ஒரு பைசா கொடுக்கவில்லை.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 12.23 P.M.

ஒப்பம்/- என்.திலகேஸ்வரி
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.